1991 சனவரி 21]

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சட்டத்திற்கு புறம்பாக தண்ணீர் எடுப்பதை நிறுத்துவதற்காக அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் அணையிலிருந்து வடிகால் மூலமாக ஆறுமுகமங்கலம் குளத்திற்கு நீர் நிரப்பப்படுகிறது. தூத்துக்குடி தொழிற்சாலைக்கும், மின் உற்பத்திக்கும் வினாடிக்கு 40 கன அடி தண்ணீர் எடுப்பதாக ஒப்பந்தம். ஆனால் ஆறுமுகமங்கலம் குளத்திற்கு ஸ்ரீவைகுண்டம் அணையிலிருந்து 140 கன அடி தண்ணீரை எடுத்துச் செல்கிறார்கள். அதனாலே தண்ணீர் போகிற போது பக்கத்தில் இருக்கிற விவசாயிகள் கவரப்பட்டு தண்ணீரை எடுக்கிறார்கள். அதற்குப் பதிலாக குழாய் மூலமாக நீங்கள் 40 கன அடி தண்ணீர் மட்டும் எடுத்துச் சென்றுவிட்டால் ஸ்ரீவைகுண்டம் அணையில் தண்ணீர் தேங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது விவசாயத்திற்குப் பயன்படும். எனவே, குழாய் ஒன்று அமைத்து அந்த 40 கன அடி தண்ணீரை எடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

10-05 மணி.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல ஸ்பிக் தொழிற்சாலைக்கும், தூத்துக்குடி தெர்மல் பிளாண்டிற்கும் தேவையான தண்ணீரைக் குழாய் மூலமாக கொண்டு செல்வதன் மூலம் இப்படிப்பட்ட பிரச்சினை எழுவதற்கு வாய்ப்பில்லையென்று நானே இலாக்காவினரிடம் தெரிவித்து அந்தச் செலவுகளை ஸ்பிக் நிறுவனமும், தெர்மல் பிளாண்ட்டும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறேன். காரணம், சில நேரங்களில் தண்ணீர் போகிறபோது இவர்களே எடுத்துவிடுகிற காரணத்தால் தொழிற்சாலை பாதிக்கப்பட்டு விடுகிறது. எனவே, அந்த எண்ணம் அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

ஜாம் தயாரிக்கும் தொழிற்சாலை.

*3780—திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம் மேச்சேரியில் பழவகைகளைக் கொண்டு ஜாம் (Jam) தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

தொழிற்பேட்டை அமைத்தல்.

*11516—திரு. ஆ. நடராசன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பேரூர் தொகுதி மலுமச்சம்பட்டி கிராமத்தில் "சிட்கோ" தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேற்படி திட்டம் "சிட்கோ" நிர்வாகக்குழுவில் வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது. நிலங்கள் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலுமச்சம்பட்டி கிராமத்தில் ஏராளமான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் துரிதமாக சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மேற்படி நிலங்களைக் கையகப்படுத்த 1990 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அரசு அனுமதியளித்துள்ளது. இந்நிலங்களைக் கையகப்படுத்துமாறு கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். நில எடுப்பிற்கான செயற்குறிப்பு பெறப்பட்டவுடன் அரசாங்கம் உடனடியாக நிலங்களை கையகப்படுத்தும்.